# பாதுகாவலன்

PATHUKAVALAN


30 1992 யாழ்ப்பாண

## அடிமை வீடு

திருத்தந்தை தமது 54வது வெளிநாட்டுப் பயணத்தையும் ஆபிரிக்காவுக்கான எட்டாவது விஜயத்தையும் பெப். 19 முதல் மேற் கொண்டு செனகல்க்கு சென்ற போது 1780இல் அடிமை வியாபாரத்துக்காக கட்டப்பட்டு ஏறக் குறைய 60,000 பேர் வரை விற்கப் பட்ட கோரி தீவிலுள்ள அடிமை வீட்டை பார்வை யிட்டு ''அடிமைகளின் அழு குரலைக் கேட்க வந்துள் ளேன்'' என்றார்.

மலர்: 118 இதழ் : 10 01–05–1992 (மே. 01 — மே. 15) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

### யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் இறுதிநாள் நிகழ்ச்சிக்கு யாழ். ஆயர்

## ★ யாழ் ஆயரை மேன்மைப்படுத்தி

# யாழ் நகரில் மாபெரும் முத்தமிழ் விழா

**யாழ். ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழாக்களை முன்னிட்டு ஆயரைச் சிறப்பிக்கும் முகமாக திருமறைக்கலாமன்றம் மாபெரும் முத்தமிழ் விழா ஒன்றினை சித்திரை 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடாத்தியது.**



மேற்படி விழாவின் இறுதி நாளான சித்திரைத் திங்கள் 26ஆம் நாள். மாலை 5.00மணியளவில் யாழ். ஆயர் அவர்கள் திருமறைக்கலா மன்ற உறுப்பினரால் மாட்டீன் வீதி-பிரதான வீதி சந்தியிலிருந்து பிரதான வீதி வழியாக மங்கள இசை ஒலிக்க, சிறுவர் மலர்மாரி பொழிய, மக்கள் வெள்ளம் அணிதிரள திருமறைக்கலா மன்ற அரங்கிற்கு தமிழ் மணங் கமழ அழைத்து வரப்பட்டார். அன்றைய தினம் அரங்கானது தமிழ் வளர்த்த பெரும் குரவர் சுவாமி ஞானப்பிரகாசரின் பெயரைச் சிறப்பாகத் தாங்கி நின்றது.

தொடர்ந்து ஆயர் அவர்கள் மங்கள விளக்கேற்ற இறை வணக்கத்துடன் விழா, யாழ். அரசாங்க அதிபர் திரு. M. மாணிக்கவாசகர் தலைமையில் ஆரம்பமானது அருட்திரு. ஜெறோ செல்வநாயகம் அடிகளாரின் வரவேற்புரையின் பின் ஆசிரியை திருமதி. மரியநாயகி மரியதாஸ், திரு. அ. பேக்மன் ஜெயராஜா ஆகியோர் ஆயர் அவர்களின் தெய்வப்பணி, மறைப்பணி ஆசிரியப்பணி, சமூகப்பணி ஆகியவற்றை நன்றியோடு நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டி ஆயர் அவர்களைக் கௌரவித்தனர்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ''ஆசியுரை வழங்கவன்று ஆசி பெற வந்தேன்'' என்று தமது ஆசியுரையில் கூறிநிற்க, ஆயர் அவர்கள் தமது பணியை நல்ல முறையில் செய்ய இறைவனின்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## மரியாயின் சேனை-ஆச்சேஸ் விழா

யாழ். மறைமாவட்ட சேனைத் தலைமைச் சபையாகிய யாழ். கொமிற்சியம் தனது வருடாந்த ஆச்சேஸ் விழாவை ஏப்ரல் 4ஆம் திகதி புனித யாகப்பர் ஆலயத்தில் நடத்தியது. யாழ் கொமிற்சியத்தின் கீழ் நேரடியாக இணைக்கப்பட்ட சகல சேனைப் பிரசீடியங்களும் பெரும்பாலும் இவ்விழாவிற் கலந்து கொண்டன. ஆச்சேஸ் சேனையார் தம்மை மரியாய்க்கு அர்ப்பணம் செய்யும் சேனையின் பிரதான விழாவாகும்.

செபமாலையின் பின் சேனையார் தத்தமது பிரசீடியக் கொடிகளை ஏந்திய வண்ணம் அணி அணியாக மாதாவின் பீடத்தண்டை சென்று சேனை விருதுக்கொடி மீது கைவைத்து தமது பிரமாணிக்கத்தைப் புதுப்பித்துக் கொண்டனர்.

இந்த அர்ப்பணத்தை நிறைவு செய்வதாக திருப்பலி இடம்பெற்றது. திருப்பலியை ஒப்புக்கொடுத்து திருவுரையாற்றிய புனித யாகப்பர் ஆலய பங்குக் குருவான பிதா பி. எம் இம்மானுவல் சேனையார் தம் வாழ்விலும், பணியிலும் இந்த அர்ப்பணத்தைக் கடைப் பிடிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

இவ்விழாவில் சுமார் 400 சேனையார் பங்குபற்றினர். விழாவுக்குரிய சகல ஏற்பாடுகளும் பிதா பி. எம். இம்மானுவல் அவர்களாலும் புனித யாகப்பர் ஆலய மரியாயின் சேனை அங்கத்தவர்களாலும் செய்யப்பட்டனஎன்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி வயலற் இம்மானுவேல்

## கருதினால் சின்னின் வெள்ளி விழா

மணிலாப் பேராயரான கருதினால் ஹைமி சின் தாம் ஆயராக திருநிலைப்படுத்தப் பட்டதன் 25வது ஆண்டு நிறைவை அண்மையில் கொண்டாடினார்.

ஜனாதிபதி அக்வினோவும் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களும், வேறு பிரமுகர்களும் அவரது வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு அவரை வாழ்த்தினர்.

கலகலப்பான சுபாவமுடையவருமான கருதினால் சின் 1967இல் ஜாரோ துணை ஆயராக திருநிலைப்படுத்தப் பட்டார். 1972 இல் ஜாரோ பேராயராகவும், 1974 இல் மணிலாப் பேராயராகவும் இரு ஆண்டுகளின் பின் கருதினாலாகவும் நியமிக்கப் பெற்றார். 1979–1983 ஆம் ஆண்டுகளில் பிலிப்பைன் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவராகவும் இருந்தார்.

1986 ஆம் ஆண்டில் இடம் பெற்ற மக்கள் கிளர்ச்சியில் அவர் முக்கிய பங்கு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழிற்சங்கவாதியை விடுதலை செய்யுமாறு கோரிக்கை

தாய்வான் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் அண்மையில் சிறையிடப்பட்டது அரசியல் நோக்குமுள்ள அடக்கு முறையான செயல் என தாய்ப்பே தொழிலாளர் நடுநிலையத்தின் இயக்குநரான பிதா ஜோசே எல்ல கூரியா குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்சங்கத் தலைவரான செங் மாவ்சிங் புடைவை உற்பத்திக் கம்பனி ஒன்றில் வேலைநிறுத்தத்தைத் தூண்டியதற்காக இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தொழிற்சங்க செயற்பாடுகளுக்காக சிறையிடப்பட்ட முதல் தொழிற்சங்கவாதி இவரே. அத்துடன் வேலைநிறுத்தத்தின் போது தொழிற்சாலைக்கு ஏற்பட்ட சேதத்துக்காக 184 ஆயிரம் டாலர் நஷ்டஈடு கட்டுமாறும் தீர்ப்பில் கூறப்பட்டது.

செங் ஒரு போதும் சட்டத்தை மீறவில்லையென்றும், அவர் எப்போதும் அகிம்சை முறைகளையே கையாண்டு வந்தார் என்றும் கூறிய பிதா எல்ல கூரியா தாய்வானிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழிற்சங்கங்கள் செங்கின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

## புதிய சமூக சிந்தனை தேவை

திருச்சபையின் சமுதாயக் கொள்கை ஐரோப்பாவை மையமாகக் கொண்டு எழுந்தது. வளர்முக நாடுகளும், பெண்களும் இதன் ஓரத்திலேயே உள்ளனர். ஆகவே ஆசியத் திருச்சபை புதிய சமுதாய சிந்தனைகளை உருவாக்க வேண்டுமென ஹொங்கொங்கில் கூடிய ஆசிய இறையியலாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

கடந்த 100 ஆண்டுகளில் கத்தோலிக்க சமுதாய சிந்தனை பாப்பானவரின் சுற்றுமடல்கள், சங்க ஏடுகள், ஆயர் சங்க ஏடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்ததேயொழிய தலத் திருச்சபைகளிலிருந்தும், அடிமட்டங்களிலிருந்தும் அதற்கு அதிக பங்களிப்பு இருக்கவில்லை!

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# பனிப்போர் முடிவு

அண்மைக்கால உலக நிகழ்வுகளில் கொம்யூனிசத்தின் வீழ்ச்சி ஒரு முக்கியமான வரலாற்றுத் திருப்பமாக அமைந்திருக்கிறது. இதன் விளைவாக எத்தனையோ நாடுகளினதும், கட்சிகளினதும் நிலைகள் தடுமாற்றம் கண்டிருக்கின்றன.

ஆப்கனிஸ்தானில் தற்போது எழுந்துள்ள சூழ்நிலையானது 1987 இல் சோவியத்படை அங்கிருந்து வெளியேறியது முதல் படிப்படியாக வளர்ச்சி அடைந்த ஒன்று என்றாலும், கொம்யூனிசத்தின் வீழ்ச்சியே அதற்கு முக்கிய காரணி எனலாம்.

எமது அண்டைநாடான இந்தியா, தனது அமைதி காக்கும் படையை எமது நாட்டுக்கு அனுப்பி, கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட உதவியாக இருந்தது, இந்தியாவின் சொந்த பணப்பலம் அல்ல, மாறாக ரஷ்யாவுடன் கொண்ட நட்பு ஒப்பந்தத்தால் எழுந்த பணப்பலம் தான். ஆனால் கொம்யூனிசத்தின் வீழ்ச்சியானது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை தொடர்ந்து அமுல்படுத்த முடியாத அளவுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டாபோட்டிகள் உலக அரங்கில் தோற்றுவித்த அழிவுகளும் அனர்த்தங்களும் எண்ணிலடங்கா.

ஆனால் இப்போது கொம்யூனிசத்தின் வீழ்ச்சியானது பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது எனலாம். சோவியத் ஒன்றியத்திலுள்ள நாடுகள் தனி நாடுகளாக பிரகடனம் செய்து கொண்டமையும், அவை அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டமையும், துரிதமான மாற்றங்களின் விளைவுகளே.

இந்த பனிப்போர் முடிவுக்கு வருவதற்கு சூத்திரதாரிகளாக இருந்தவர்கள் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி மிகாயில் கோர்பச்சேவும் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரும் என உலகில் பரவலாக கருதப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக இவர்கள் இருவரும் தெரிவித்த கருத்துக்களை வாசகர்களின் நன்மைகருதி இங்கு பிரசுரிக்கிறோம்.

மதத் தலைவர்கள் அரசியல் மாற்றங்களுக்கு காரணமாக இருப்பது வெள்ளிடைமலை. ஆனால் அவற்றின் தாக்கங்கள் மனித உரிமைக்கும் மதச் சுதந்தரத்துக்கும் பாதகமாக இல்லாமல் அவை அவற்றைப் பேணுவதற்கு உதவ வேண்டும் என்பதை திருத்தந்தையின் கருத்திலிருந்து காணமுடிகிறது.

பனிப்போர் முடிவுக்கு திருச்சபை பெரும்பங்காற்றியிருக்கின்றது என எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இவை மனித உரிமைகளைப் பேணவும் மதச் சுதந்திரத்தை பாதுகாக்கவும் நற்செய்தியின் தூண்டுதலால் மேற்கொள்ளப்பட்டன என திருத்தந்தை விளக்கியுள்ளார்.

திருத்தந்தையின் பேட்டியின் போது அவர் கோர்பச்சேவ் ''ஆன்மீக செல்வம் மிக்கவர்'' எனப் பாராட்டியுள்ளார்.

பனிப்போர் முடிவால் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் நமது நாட்டில் இனப்பிரச்சினைத் தீர்விற்கான வழிகளிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன.

வல்லரசுகளின் போட்டி போட்டி மாறி,இந்தியாவின் மேலாதிக்கம் திசை மாறி நிற்கும் இக்கால கட்டத்தில், நமது நாட்டு இனப்பிரச்சினையின் சிக்கல்களை புதய அணுகுமுறைகளால் தீர்க்க வழி தேடப்பட்டு வருகின்றன.

மதத்தலைவர்களின் முயற்சியும், ஆன்மீக செல்வம் மிக்க தலைவர்களின் பங்களிப்பும் உள்நாட்டுப் போருக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கின்றது.

# திருத்தந்தையும் கோர்பச்சேவும்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் வீழ்ச்சியடைந்ததில் ஓர் முக்கிய அரசியல் பங்கு வகித்தாரென முன்னாள் சோவியத் தலைவர் மிக்காயில் கொர்பசேவ் கூறியுள்ளார். இதற்கு மறுமொழியாக, கம்யூனிஸத்தின் வீழ்ச்சியில் தாம் திட்டவட்டமான அரசியல் பங்கு வகிக்கவில்லையென்றும், மனித உரிமைகளுக்கும் மத சுதந்திரத்துக்கும் திருச்சபை குரல்கொடுக்க வேண்டியிருப்பதால் நற்செய்தியின் அரசியல் பரிமாணத்துக்கமையவே தமது செல்வாக்கு எழுந்துள்ளதென்றும் திருத்தந்தை கூறினார்.

முன்னாள் கம்யூனிஸ்ட் தலைவரான கொர்பசேவ் திருத்தந்தையைப் புகழ்ந்து எழுதிய ஒரு கட்டுரை உலகில் பல செய்தித் தாள்களிற் பிரசுரிக்கபபட்டது. இத்தாலியில் இதை வெளியிட்ட லாஸ்தாம்பா என்னும் பத்திரிகை மறுநாள் திருத்தந்தையுடன் நடத்திய ஒரு பேட்டியையும் பிரசுரித்தது. பெப்ரவரி 15ஆம் திகதி 12 நிமிடம் இடம்பெற்ற இப்பேட்டியில் கொர்பசேவின் கட்டுரையை திருத்தந்தைக்கு அளித்து அவரது கருத்தை அறிய விரும்பினர்.

ஐரோப்பாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நுட்பமான அரசியல் மாற்றங்களில் திருத்தந்தைதொடர்ந்து முக்கிய பங்கு வகிப்பாரென்று அவரது பிரசன்னமும் உலக அரங்கில் அவர் வகித்த பெரும் பங்கும்—அரசியல் உட்பட—இன்றி கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்திருக்க முடியாதென்றும் எழுதிய கொர்பசேவ் 'இந்த ஆண்டுகளில்திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பரின் செயல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றார்.

பின்னர் 'புதிய அரசியல் கருத்துக்கள்' என அழைக்கப்பட்ட ஒரு நிலையை உருவாக்குவதில் திருத்தந்தையின் பங்கு என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்குத் தமக்கு அவரோடு ஏற்பட்ட சந்திப்புகள் துணைபுரிந்ததாக கொர்பசேவ் கூறுகின்றார். ''திருத்தந்தையுடன் ஏற்பட்ட நேரடியான தொடர்பு, அவரிடமிருந்து ஒரு சக்தி பிறந்து, அவரைக் குறித்து ஓர் ஆழ்ந்த நம்பிக்கையை ஒருவர் உணருவதுபோன்ற ஒரு எண்ணப்பதிவை உண்டாக்குகிறது. இத்தகைய உறவுகளில் ஒரு உந்துணர்வான அல்லது உள்ளுணர்வான ஒரு பரிமாணம், தனிப்பட்ட ஆட்களுக்குரிய ஒரு பரிமாணம் உண்டு. நான் ஏற்றுக்கொள்ளும் எத்தனையோ கருத்துகள் அவரது உரைகளில் அடங்கியுள்ளன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்'' என கொர்பசேவ் கூறுகிறார்.

''இந்த உறவினால் கத்தோலிக்க திருச்சபையும் நன்மையடைந்துள்ளது. சோவியத் யூணியனின் மதங்களுக்கிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. ஓதொடொக்ஸ் சபைக்கும் கத்தோலிக்க திருச்சபைக்குமிடையே உறவுகளை முறைப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்தோம்'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

பரஸ்பர நலனுக்குரிய விடயங்களில் தாம் தொடர்ந்து திருத்நந்தையுடன் ஒத்துழைக்கப் போவதாக கொர்பசேவ் கூறினார். ஏனெனில் ''எம்மிருவருக்குமிடையில் ஓர் ஆழ்ந்த ஒத்துணர்வும் புரிந்துணர்வும்—ஓர் ஆன்மீக புரிந்துணர்வு—உள்ளன. நாம் இருவரும் ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்தவர்களென்பது இதற்கு துணைபுரிகிறது''

திருத்தந்தை தமது பேட்டியில் கொர்பசேவை ''மிகுந்த ஆன்ம வளம்பொருந்தியவர்'' எனப் புகழ்ந்தார். மேலும் அவர் கூறியதாவது. ''கம்யூனிசத்தின் வீழ்ச்சியில் திருச்சபைதான் முக்கியமேயொழிய திருத்தந்தையல்ல. நற்செய்தி மனித மாண்பை வலியுறுத்துகின்றது. ஆகவே மனித உரிமைகளையும் மனச் சுதந்திரத்தையும் தான். இதற்கு அரசியல் பெறுமானம் உண்டென்றால் திருத்தந்தையைப் பொறுத்தமட்டிலும் இது உண்மையே.''

1978இல் நான் பாப்பரசரானபோது, கிழக்கு ஐரோப்பாவில் நிகழ்ந்துள்ளதுபோன்ற அடிப்படையான ஒரு பெருமாற்றத்துக்குத் துணைபுரிவேனென நினைக்கவேயில்லை. அது எண்ணியும் பார்க்க முடியாததாகையால் நான் அதைப் பற்றி நினைக்கவில்லை.

ரஷ்யாவுக்குச் செல்லும் நோக்கம்பற்றி வினாவப்பட்டபோது மேலும் பல காரியங்கள் செய்ய வேண்டியிருப்பதால் 1992இல் இப்பயணம் நிகழாது எனக் கூறினார்.

1989இல் கொர்பசேவுடன் ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு இறைதிட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது என்றார். அவர் கொர்பசேவ் திருத்தந்தையைச் சந்தித்த முதல் சோவியத் தலைவராவர். அச்சந்திப்பின் போது திருத்தந்தை கொர்பசேவின் உள்நாட்டு சீர் திருத்தத்திட்டங்களுக்கு தமது ஆசீர்வாதத்தை அளித்தார். கொர்பசேவ் மதசுதந்திரத்திற்கு மதிப்பளிப்பதாக வாக்களித்தார். ஓராண்டின்பின்னர் சோவியத் அதிகாரத்தின்மீது கொர்பசேவின் பிடி தளர்ந்து கொண்டிருக்கும் போது அவ்விருவரும் மீண்டும் சந்தித்தனர். அப்போது கொர்பசேவினுடைய ஆட்சி எதிரிடையான இருசாராரின் நெருக்கிடையினால் ஆபத்துக்குள்ளாகியிருந்தது.

# ஆயர் குழுவினரின் திடீர் மடு விஜயம்

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு யாழ்பபாணம் வந்த ஆயர் குழுவினர்; தங்களது பயண இறுதியில் மடு அன்னையின் திருத்தலத்தையும் தரிசித்தனர். பல சிரமங்கள் மத்தியில் யாழ்ப்பாணப் பயணதத்தை முடித்து திரும்பிக் கொண்டிருந்த ஆயர் குழுவினரை மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் வவுனியாவில் சந்திக்க நேர்ந்தது. மடுவில் உள்ள அகதிகளையும் சந்திக்க உங்களுக்கு விருப்பமா என மன்னார் ஆயர் கேட்டபோது மகிழ்ச்சியுடன் அவர்கள் சம்மதித்தனர்.

இக குழுவில் சிலாப ஆயர் பேரருள்திரு பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ, கண்டி ஆயர் பேரருள்திரு வியான்னி பெர்னாண்டோ, அருள்திரு ஏ. அலெக்சாண்டர், இலங்கை கத்தோலிக்க யூனியன் தலைவர் திரு. நியூட்டன் பெர்னாண்டோ, வண. சம்காரி எத்துஸ் அல்விஸ் ஆகியோர் இடம பெற்றிருந்தனர். மார்ச் 21ஆம் திகதி பகல் 12 மணியளவில் மன்னார் ஆயர் சகிதம மடுத்திருப்பதியில் இக் குழுவினர் வந்திறங்கியபோது மடுப் பரிபாலகர் அருள்திரு. பி. யேசுறாஜா, உதவிப் பரிபாலகர் அருள்திரு கே. தேவறாஜா மற்றும் குருக்களும் குழுவினரை வரவேற்றனர்.

சனிக் கிழமை மாலையில் மடுவில் உள்ள பல்லாயிரக் கணக்கான அகதிகளின் முகாம்களை ஆயர்கள் தரிசித்தனர். மன்னார் ஆயர், மடுப் பரிபாலகர் மற்றும் குருக்கள் இக் குழுவினரை அழைத்துச் சென்று அகதிகளான மக்களின் அவல நிலையை நேரில் காண்பித்தனர். தமிழில் சரளமாக உரையாடிய சிலாப, கண்டி ஆயர்கள் மக்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்டு அனுதாபப் பட்டனர்.

அன்று மாலை இடம்பெற்ற நற்கருணை ஆராதனையில் ஆயர்கள் கலந்து கொண்டனர். சிலாப ஆயரினால் நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டது. ஞாயிறு காலையில் மன்னார், சிலாப, கண்டி ஆயர்கள். மடுப் பரிபாலகர் மற்றும் குருக்களுடன் சேர்ந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

சிலாப ஆயர் தம் மறை உரையில் சமாதானத்திற்காக செபிக்கும்படியும், எம் விசுவாச வாழ்வை ஆழப்படுத்த இத் துன்ப நாட்களை நாம் பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். திருப்பலியின் முடிவில் மன்னார் ஆயர் அவர்கள் வருகை தந்த ஆயர்களுக்கும் மற்றவர்களுக்கும் மன்னார் மறைமாவட்ட குருக்கள், மக்கள் சார்பாக தம் நன்றியைத் தெரிவித்ததுடன், அவர்களின் யாழ்ப்பாணப் பயணத்தின் நோக்கம் பற்றியும் எடுத்துக் கூறினார்.

தமிழ் நேசன்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# 1990களை நோக்கி.......
# தூரத்துப்பார்வை
# அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

அருட் திரு. பி. இ யேசுதாசன் அ. ம. தி.

(15)

## இறைவார்த்தைப் பணியில் அமதிகள்

பிரான்சியப் புரட்சியின் விளைவாக விசுவாசம் தூர்ந்து, அறம் நலிந்து, சீர்குலைந்திருந்த இறைமக்கள் சமுதாயத்தை இறைவார்த்தையின் வலிமையினால் சீர்படுத்தவே ஆயர் டி மசனெட் ''அமல மரித்தியாகிகள்'' சபையைத் தாபித்தார். இதே இலட்சியம் கொண்ட மறைமாவட்டக் குருக்கள் சிலரை ஒன்றுசேர்த்து அவர் ஆரம்பித்த இச் சிறிய சபை, காலப் போக்கில் அனைத்துலக நாடுகளிலும் பணிபுரியும் ஒரு துறவற சபையாக உருமாறியது, எனினும் ''இறைவார்த்தையின் வலிமையினால் இறை சமுதாயத்தைக் கட்டியெழுப்பும்'' ஆயர் டி மசமெண்ட் அவர்களின் இலட்சியம் கடுகளவேனும் பிறளவில்லை. அன்றும், இன்றும், என்றும் இறைவார்த்தைப் பணியே அமலமரித்தியாகிகளின் அதிமுக்கிய, தனிச் சிறப்புப் பணியாக இருந்து வருகின்றது. ''ஏழைகளுக்கு நற்செய்தி சொல்ல என்னை அனுப்பினார்'' என்ற அவர்களின் விருது வாக்கே இதற்கு ஆதாரம்.

ஆயர் பெற்றக்கினியின் அழைப்பை ஏற்று 1848இல் ஈழத்தில் காலடிவைத்த அமலமரித் தியாகிகள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டாலும், தம் சிறப்புப்பணியான இறைவார்த்தைப் பணியில் கண்ணும் கருத்துமாயிருந்தனர். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களின் மொழியை நன்கு கற்று, அம்மொழியிலேயே அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து, கிறிஸ்தவ சமுதாயங்களைக் கட்டியெழுப்பினர். குறிப்பாக நம் மண்ணில் பணிபுரிந்த பிரஞ்சு நாட்டுத் தியாகிகள் தமிழ, சிங்கள மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, சிறந்த போதகர்களாகவும், எழுத்தாளர்களாகவும், இறைவார்த்தைப் பணியாளர்களாகவும் திகழ்ந்தனர்.

ஈழத்தில் திருச்சபை வேரூன்றி, வளர்ந்து படர, இறைவார்த்தைப் பணியின் தேவையும் அதிகரித்தது. இத்தேவையை நிறைவு செய்ய இறைவார்த்தைப் பணிக்கென்று இரு இல்லங்கள் உருவாகின. தெற்கில் வென்னப்புவ என்ற இடத்தில் ''நசரேத்'' (1948) என்றும் வடக்கில் கொழும்புத்துறையில் 'அமல உறபவம்' (1961) என்றும் இறைவார்த்தைப் பணியாளர்களுக்கென இரு இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று யாழ் மாகாணத்தில் அமலமரித் தியாகிகள் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ''தொடர்பகத்தில்'' இருந்து தமது இறைவார்த்தைப் பணியை ஆற்றி வருகின்றனர். இவர்களின் பணியில் அரசியல் நெருக்கடிகள், இனத்துவேசங்கள், பயணக் கஷ்டங்கள், மதிப்பீடுகளில் குளறுபடிகள், பிரிவினைச் சபைகளின் ஊடுருவல் போன்ற பல இடையூறுகள் குறுக்கிடினும், அவர்கள் இவைகளையெல்லாம் தடைகளாகவல்ல — மாறாகச் சவால்களாக எதிர்கொண்டு, செயல்பட்டு வருகின்றனர்.

அண்மைக் காலங்களில் இறைவார்த்தைப் பணியின் தேவையும் அவசியமும் அதிகரித்து வருகிறது. இன்று உலகெங்கும் பரவிவரும் உலகாயுதக் கொள்கைகள், இறைமறுப்புக் கொள்கைகளால் கிறிஸ்தவ நாடுகளும் தம் மதிப்பீடுகளை மறந்து, சீரழிந்து காணப்படுகின்றன. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தாம் செல்லுமிடமெல்லாம் முழு உலகிற்கும் மீளவும் நறசெய்தி அறிவிக்கும் பணியின் அவசியத்தை வலியுறுத்தி, நவீன தொடர்பு சாதன முறைகளைக் கையாண்டு, 'புதுக்க நற்செய்தியை அறிவிக்க'' அழைப்பு விடுத்து வருகின்றார். தியாகிகளின் மாஅதிபர், அருள்திரு மார்சலோ அடிகளாரும், அண்மையில் ''புதுக்க நற்செய்தியை மீள அறிவிக்கும் பணிக்கு நம்மை அர்ப்பணிப்பதன் வழியாக எம் சபையின் அருங்கொடையை நாம் வளர்க்கலாம்'' எனக் கூறி, இறைவார்த்தைப் பணிபற்றிய நம் பார்வையையும், அர்ப்பணத்தையும் புதுப்பிக்க அழைப்புவிடுத்து வருகின்றார். நாம் பணிபுரியும் மக்களின் சமுக கலாச்சார சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப நம் இறைவார்த்தைப் பணிமுறை

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# கல்வாரிப் பரணி — ஒரு விமர்சனக் கடிதம்

முப்பரிமாணத் திரையரங்கில் தேவைக் கேற்ப **ஒளி** வழங்கலும், ஒலி மிளற்றலுமுள்ள அதி உன்னத நாடகத்தினை நாடி நரம்புகள் வேகமாக உணர்வு பெறக் கண்டுகளித்தேன். திருமறைக்கலாமன்றத்தின் நாடகத் தமிழ்ப்பணி வேண்டற்பாலது; வியக்கத்தக்கது. வீரமா முனிவர், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற அறிவுடை நம்பியர்களிடம் காணப்பட்ட தியாகத்தொனி இன்றைய திருமறைக்கலாமன்ற மூல மூர்த்தியாய அடிகளாரிடமும் காணப்படுவது கண்டு தமிழ்மகன் என்ற வகையில் களிக்கின்றேன். நாடக உயிரூட்டத்திற்கு சுருதி பிழைக்காது, சொற்கள் தடுக்காது, முத்திரை மாறுபடாது, உதவி ஒலி ஊறுபடாது சேர்ந்து செயற்பட இருமணி நேரமாக நீ.மரிய சேவியர் அடிகளார் பட்ட விறுவிறுப்பையும், சுறுசுறுப்பையும் கண்டு வியப்படைந்தேன்.

இரு மணி நேரம் உணர்வலையால் தன்மயமாகி, கலையென்னும் கங்கையில் மூழ்கித் தோய்ந்தெழுந்தேன். ஒப்பனை ஆடை அலங்காரம் மெச்சத் தக்கதே. இவை உண்மையொழிய, வெறும் புகழ்ச்சியிலை.

அடிகள் பணி வெல்க!  
நாடகத் தமிழ் மலர்க!  
நற்றமிழ் உலகு தழைக்க!  
ஆண்டவன் அருள் கனிக!

சி. வேலாயுதம்  
பிரதிக் கல்விப் பணிப்பாளர்  
யாழ் கோட்டப் பணிமனை.

# 10 ஆண்டு சேவைக்கு பாராட்டு விழா

அளவெட்டி, புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த சிங்கராயர் மேரியுஸ்ரீனா தம்பதியினரின் புதல்வி செல்வி ஆன்சலா ராஜினி அவர்கள் மாங்குளம் பங்கில் தொடர்ந்து 10 ஆண்டுகளாக மறைஆசிரியர் பணியாற்றினார். இவரின் சேவையைப் பாராட்டி மாங்குளம் பங்குத்தந்தையும், அருட்சகோதரனும் மறையாசிரியர் சங்கமும் ஒன்றிணைந்து வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் பங்குனி 28ஆம் திகதி சனிக்கிழமை விழா ஒன்றினை நடாத்தியது.

காலை 8.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு. R. சூசைநாதன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதன் பின்பு பங்குத்தந்தையின் தலைமையில் தேனீர் விருந்துபசாரமும் கூட்டமும் நடைபெற்றது.

பங்குத்தந்தையவர்கள் தனது உரையிலே இன்றைய விழா நாயகியின், 10 ஆண்டுப் பணி, ''பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது'' எனவும் இவரின் 10 ஆண்டுப்பணிக்கு இறைவனுக்கு நன்றி கூறுவது நமது கடமை எனவும், இவ்வாறு தொடர்ந்து 10 வருடங்கள் பணி செய்து நிறைவு பெற்று மகிழும் மறையாசிரியையை நாம் பாராட்ட வேண்டும் எனவும் இவரைப்போல ஏனைய மறையாசிரியர்களின் பணியும் தொடரவேண்டுமெனவும் கூறினார். மதிய உணவுடன் விழா இனிதே நிறைவுற்றது.

செல்வி இ. மேரிகியால்டுமா  
(மறையாசிரியர்)  
வவுனிக்குளம்.

## 1-ம் ஆண்டு நினைவு



**செல்வன் டேவிற் செபஸ்ரியன்**

ஜனனம் 21-01-1976 மரணம் 13-05-1991


தீராத விளையாட்டுப் பிள்ளையாகத் திகழ்ந்தாய், போராட்ட வாழ்விலே விரும்பியே இணைந்தாய்.

இரக்கமுள்ள இயேசுவே, உம்முடைய திரு நிழலில் சேர்ந்த செல்வன் டேவிற் செபஸ்ரியன் இவருக்கு முடிவில்லாத பேரின்பசுகத்தைக் கட்டளையிட்டருள்வீராக. நித்திய பிரகாசம் இவர்மேல் ஒளிர்வதாக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

அனைவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்

இவரின் பிரிவால் துயருறும்  
தந்தை, தாய், சகோதரர்கள்,  
உற்றார், உறவினர்.  
127, அரசடி லேன்,  
அரியாலை A/10/92

## விண்ணக வாழ்வின் 10-ம் ஆண்டு நினைவு



**மனுவேற்பிள்ளை யோசேப்பு**  
(நாட்டுக் கூத்துக் கலாநிதி)  
அன்னையின் கரங்களில்  
19-03-1904  
பிதாவின் கரங்களில்  
14-05-1982

உத்தானமும் உயிரும் நாளே என்றுரைத்த யேசுவே, உமது அன்பின் பாதையில் வாழ்ந்து இவ்வுலகை விட்டகன்ற இவரின் ஆன்மாவை அமைதியும் இன்பமும் நிலவும் மோட்ச வீட்டில் உமதண்டை எற்றருள வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14-05-92 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும், 15-05-92 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறீஸ்து அரசர் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்

இதில் அனைவரையும் பங்கு கொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

A/9/92 குடும்பத்தினர்

### சிதறியமுத்து

ஈசலுக்கு அழிவு காலம் வரும்போது இறகு முளைக்கும். மனிதனுக்கு அழிவு காலம் வரும் போது அகங்காரம் முளைக்கும்.

## முதல் வருட நினைவஞ்சலி

திருமதி கிறிஸ்தினா அந்திரேஸ்பிள்ளை

மலர்வு:- 20-10-1901  
உதிர்வு:- 15-05-1991

''வாழ்வில் என்மேல் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்.''



இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் 16-5-91 காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் வருந்தும்  
சில்லாலை. மக்கள், பேரர், பூட்டப்பிள்ளைகள். A/7/92

பாதுகாவலன்
PATHUKAVALAN

# அ. ம. தியாகிகள் மகாநாடு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழுவி அமைக்கப்பட வேண்டுமென்பதே அமல மரித்தியாகிகளின் விருப்பம் காலத்தின் தேவைகளுக்கேற்ப போதனா முறையின் கோலங்களும் மாறவேண்டும்.

எனவேதான் விரைவில் கூடவிருக்கும் அமலமரித்தியாகிகளின் மாநாட்டில் தங்கள் இறைவார்த்தைப் பணிபற்றி ஆராய்ந்து மதிப்பீடு செய்து சில புதிய வழிமுறைகள் திட்டங்களை வகுக்கவுள்ளார்கள். இதற்கு உதவியாகப் பங்குத்தளங்களில் பணிபுரியும் குருக்கள், துறவிகள், பொதுநிலையினருடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று வருகிறார்கள். பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. மகாஞானொடுக்கம், நவநாள் மறையுரைகள் கருத்தரங்குகள் போன்ற பரம்பரை இறைவார்த்தைப் பணிமுறைகள் இன்று அர்த்தமுள்ளவைகளாக உள்ளனவா? எதிர்பார்த்த நன்மைகளை பயன்களை அளித்திருக்கின்றனவா? மக்களின் சமூக நலன் வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்தி, மறுமலர்ச்சியைக் கொண்டு வருகின்றனவா? கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்க உதவியுள்ளனவா? இவைகளின் குறை நிறைகள் என்ன?

இப் பணியில் இன்றைய நவீன தொடர்பு சாதனங்களை சமூகத் தொடர்பு முறைகளைக் கையாண்டால் என்ன? திரைப் படங்கள், ரி. வி கசெட்டுகள், நிலைப் படங்களை நம் தேவைக்கு ஏற்ற முறையில் தயாரித்து, அல்லது வரவழைத்து, மக்களுக்கு கவர்ச்சியான வழியில் இறைவார்த்தையைப் பரப்ப முடியாதா? விவிலியத்தை, கிறிஸ்தவ விழுமியங்களை அடிப்படையாகவைத்து நாடகங்கள், நாட்டிய நடனங்கள், பட்டிமன்றங்கள், கதாப்பிரசங்கங்கள் போன்றவற்றைத் தயாரித்து பயன்படுத்த முடியாதா? வேதாகம வகுப்புக்கள், விவிலிய கருத்தரங்குகள், தலைமைத்துவப் பயிற்சிமுகாம்கள், மாணவர் பாசறைகள் போன்றவற்றை ஒழுங்கு செய்ய முடியாதா? பங்குகள் தோறும் அடிப்படைக் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கி, உதவி செய்து வளர்த்தால் என்ன? நம் இறைவார்த்தைப் பணியில் அப்போஸ்தலிக்க ஆர்வம், திறன், ஆற்றல் கொண்ட பொது நிலையினரைப் பங்காளிகளாக்கிக் கொண்டால் என்ன? இவ்வாறெல்லாம் இன்றைய அமலமரித்தியாகிகளின் எண்ணங்களும், சிந்தனைகளும் சுழலுகின்றன.

அன்பான வாசகர்களே! இவ்விடயம் பற்றிய உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள், ஆலோசனைகள் என்ன? எமக்கு எழுதி அவற்றை அறியத் தருவீர்களா? இதுவே இந்த ஆக்க பூர்வமான முயற்சியில் உங்கள் பங்களிப்பாகும், இந்த மாநாட்டில் நாம் எடுக்கவிருக்கும் முடிவுகள், தீர்மானங்கள் உங்கள் ஆன்மீக சமய, முழுமையான வாழ்விற்கு, வளர்ச்சிக்கு மிகவும் உதவியாயிருக்க வேண்டுமென்பதே எங்கள் நோக்கமும் எதிர்பார்ப்புமாகும்.

# மாங்குளத்தில் தியானயாத்திரை

மாங்குளம் — வவுனிக்குளம் பங்கிலே கடந்த 11–4–92 சனிக்கிழமை மகா சிலுவைப் பாதை தியானயாத்திரை இடம் பெற்றது. இது அருட்திரு இரா. சூசைநாதன் அடிகளினாலும். அருட் சகோதரர் ஜோர்ஜ் றெனோல்ட் அவர்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்டு சிறப்பான முறையில் நடாத்தி முடிக்கப்பட்டது. இச்சிலுவைப்பாதையிலே யேசுவின் பாடுகள் நவீன குறியீடு நாடக பாணியில் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிலைகளிலும் காண்பிக்கப்பட்டது. அத்துடன் இத்தியானயாத்திரையிலே, அமைதிபுர பங்குத் தந்தையான அருட்திரு ஜீவதாஸ் அடிகளாரின் மறை உரைகளும் இடம் பெற்றது.

இத்தியான யாத்திரையானது பி.ப 2.30 மணிக்கு வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மைல்களுக்கப்பாலுள்ள மல்லாவி புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவு பெற்றது. பங்கு கிறிஸ்தவர்கள் உட்பட பெருமளவு இந்துமத சகோதரர்களும் இதில் பங்கு பற்றினர்.

I. நளாயினி
(மறைஆசிரியர்)
மாங்குளம்.

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

# கருச்சிதைவுக்கு ஆயர் கண்டனம்

தென் சுமாத்திராவிலுள்ள பாலெம்பாங் மறைமாவட்ட ஆயர் மீஜாசவ் சவுடாந்த் அங்கு பெருகி வரும் கருச்சிதைவுகள் குறித்து கவலை தெரிவித்துள்ளார். கத்தோலிக்க வைத்தியசாலையொன்றின் வைத்தியர், தாதிகள் ஆகியோருக்கு உரையாற்றுகையிலே பணத்திற்காக பல மருத்துவர்கள் கருச்சிதைவை மேற்கொள்கின்றரென்றும் அதை சட்டபூர்வமாக்க முயல்கின்றனர் என்றும் கூறினார்.

இந்தோனேஷியாவில் கருச்சிதைவு சட்ட விரோதமாக இருக்கின்ற போதிலும் ஜகார்ட்டா, சூரபாயா போன்ற பெரிய நகரங்களில் எத்தனையோ வைத்திய நிலையங்கள் மறைமுகமாக இதனைச் செய்து வருகின்றன.

கடவுள் எல்லா உயிர்களையும் அன்பு செய்கிறார் என்றும், கருக்கள், வயிற்றிலுள்ள சிசுக்கள் உட்பட எல்லா உயிர்களையும் காக்கும்படி வைத்தியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆயர் மேலும் கூறினார்.

# யாழ் மறைவட்டப் பொதுநிலையினர் கழகம்

யாழ். மறைவட்டப் பொது நிலையினர் கழகத்தின் 1992/94ஆம் ஆண்டு புதிய தொடரின் முதலமர்வுக் கூட்டம், பொது நிலையினர் கழக மண்டபத்தில் 11 4-92 சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு முன்னாள் தலைவர் திரு. A. S. அகஸ்தீன் தலைமையில் நடைபெற்றது.

புதிய தொடரின் முதலமர்வுக் கூட்டத்திற்கு நான்கு மறைவட்டாரங்களின் அலுவலர்களும், ஆயரால் நியமனம் பெற்ற உறுப்பினர்களும் கழகத்தின் ஆன்மீக வழிகாட்டியான அருட்திரு. S. H. ஜெபநேசன் அடிகளாரும் சமுகமளித்திருந்தனர்.

இக் கூட்டத்திற்கு சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டிருந்த அருட்திரு P. யேசுதாசன் அடிகளார், "நானே உண்மையான திராட்சைக்கொடி ... என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது' என்ற, நற்செய்தியினை மேற்கோள் கொண்டு அருங் கருத்துரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற புதிய அலுவலர் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு J. G. இராசேந்திரம். உப தலைவர் திரு. P. A. C. ஆனந்தராஜா. செயலர் திரு. மோ. தார்சீசியஸ், உப செயலர் திரு. மரியான் சூசைமுத்து, பொருளர் திரு. அ. எட்வேட்

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

திரு W. S. கொலின்ஸ் (மானிப்பாய்), திரு. A. S. அலெக்ஸ்சாந்தர் கிளிநொச்சி), திருமதி C M மரியாம்பிள்ளை (யாழ்ப்பாணம்), திரு. A. S. லோறன்ஸ் (இளவாலை)

மோ. தார்சீசியஸ்
செயலர், யா. ம. பொ. கழகம்

## விண்ணகப் பிரவேச 1ஆம் வருட ஞாபகம்



திருமதி. மரியமுத்து மார்சலின்பிள்ளை

உதயம் 21-11-1920 அஸ்தமனம் 05-05-1991

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம்
கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வல்வெட்டித்துறை, புனித செபஸ்தியார் தேவாலயத்தில் 05–05–1992 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி
இவவின்பேரிழப்பால்துயருறும்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், உறவினர்
நெடியகாடு
A/12/92 வல்வெட்டித்துறை

## யாழ் ஆயரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்பும், இரக்கமும் எவ்வேளையிலும் தம்மோடிருந்தது காரணம் என்று இறைவனுக்கும், தம்மைக் கௌரவித்தவர்களுக்கும் நன்றி கூறினார்.

இயற்றமிழ் அரங்கில் பேராசிரியர்கள் ஏ. சண்முகதாஸ் திரு. எஸ். சிவலிங்கராசா ஆகியோர் முறையே "சொற்பிறப்பியலும், சுவாமி ஞானப்பிரகாசரும்" "ஈழத்தமிழிலக்கியத்தில் அம்மானை" என்ற தலைப்புகளில் பேருரையாற்றினர்.

இசையரங்கில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் மூவிரண்டு கவிக்குயில்கள் கவிமழை பொழிந்தன. திரு. அ. பிலிப்பையா அவர்களின் நன்றியுரையின் பின் நாடகத் தமிழ் அரங்கில் "சிந்தாமணி" நாட்டிய நாடகம் இடம் பெற்றது.

மூன்று நாட்களிலும் இயல், இசை, நாடக அரங்குகளில் இடம் பெற்ற பல்வேறு சுவையான அம்சங்களைக் கண்டு களிக்க மக்கள் வெள்ளம் அலைமோதியமையும் குறிப்பிடத்தக்கது.


# புதுக்குடியிருப்பில் மறைஆசிரியர்கள் சாதனை

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தேசிய மறையாசிரியர்கள் பரீட்சைக்கு தோற்றிய புதுக்குடியிப்பு பங்கைச் சேர்ந்த மறையாசிரியர்கள் திறமையான சித்திகளை பெற்றுள்ளார்கள். முதலாம் பரீட்சையில் நால்வர் விசேட சித்தியும் ஐவர் திறமைச் சித்தியும், இரண்டாம் பரீட்சையில் ஒருவர் விசேட சித்தியும் ஐவர் திறமைச் சித்தியும் பெற்றுள்ளார்கள். யாழ் மறைக்கல்வி நிலையத்தினரின் முயற்சியினால் இந்த தேசிய மறையாசிரியர் பரீட்சை யாழ். மறைமாவட்டத்தில் முதல் முறையாக நடாத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## 1-ம் வருட நினைவு

அத்தனாஸ் சிங்கராயர்
(ஐயாத்துரை)

பிறப்பு 11–11–1918 இறப்பு 11–05–1991



எதிர்வரும் 01-05-1092 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ். அருள் ஆச்சிரமம் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
சகோதரர், மைத்துனர், மருமக்கள்,
பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை.
A/11/92

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**